

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று மதுரையில், திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினருமான இ.பெ.செந்தில்குமார், தனது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்வில் இருக்கும் முன்னாள் முதலமைச்சர் போடி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஓ. பன்னீர்செல்வம் அவர்களை, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து, நலம் விசாரித்தார். மேலும், அவர் விரைவில் குணமடைந்து இயக்கப் பணியாற்ற, தனது அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார்.

தமிழ்நாட்டு இளைஞர்களின்-அரசு வேலைக் கனவைச் சிதைக்கும்

த.வெ.க. அரசின் 'அவுட்சோர்சிங்' நடவடிக்கைக்கு கடும் கண்டனம்!

மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, அக். 31 -

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் சட்ட மன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையில் (அவுட் சோர்சிங்) பணியாளர்களை நியமிப்பதற்காகத் தமிழக அரசு புதிய அரசாணையை வெளியிட்டுள்ளது. அரசுப் பணியிடங்களைப் படிப்படியாக நிரந்தரப் பணியிலிருந்து ஒப்பந்தப் பணிகளாக மாற்றும் இந்த நடவடிக்கை, தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை இருளில் தள்ளும் மிக மோசமான முடிவாகும்.

அரசுப் பணிக்காகப் பல ஆண்டுகளாகப் படித்துத் தயாராகி வரும் லட்சக்கணக்கான இளைஞர்களின் கனவுகளில் மண்ணள்ளிப் போடும் செயலாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது. அரசுத் துறைகளுக்குத் தேவையான பணியாளர்களை வழங்கும் முகமையாக வெளிநாட்டு மனிதவளக் கழகத்தை (Overseas Manpower Corporation Limited) தமிழக அரசு நியமித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.



அரசு அலுவலகங்களில் கடைநிலைப் பணியாளர் முதல் மேலாளர் நிலை வரையிலான பணிகளுக்குப் பணியாளர்களை அவுட்சோர்சிங் முறையில் வழங்கும் பொறுப்பு இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அரசுப் பணியிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்குப் பதிலாக ஒப்பந்த முறையை விரிவுபடுத்துவது, இளைஞர்களின் வேலைவாய்ப்பு உரிமையைப் பறிப்பதோடு மட்டுமல்லாமல், சமூகநீதியையும் தொழிலாளர் நலனையும் ஒருசேரச் சிதைக்கும் நடவடிக்கையாகும்.

தமிழ்நாட்டின் சமூகநீதிப் பாரம்பரியத்திற்கும், இளைஞர்களின் எதிர்காலத்திற்கும் எதிரான இந்த அரசாணையைத் தமிழக அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். அரசுத் துறைகளிலும் பொதுத்துறை நிறுவனங்களிலும் உள்ள காலிப் பணியிடங்களை இடஒதுக்கீட்டு முறையை முழுமையாகப் பின்பற்றி, நிரந்தர அடிப்படையில் நேரடியாக நிரப்ப வேண்டும் எனத் தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

தன் வாழ்நாளில் பெரும் பகுதியை சிறையிலே கழித்த தியாகத்துக்குச் சொந்தக்காரர்!

பசும்பொன் தேவர் திருமகனாருக்கு – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, அக். 31 - பசும்பொன் தேவர் அவர்களின் குருபூஜை நாளான நேற்று, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவில், "தன் வாழ்நாளின் பெரும் பகுதியை சிறையிலே கழித்த தியாகத்துக்குச் சொந்தக்காரர், பசும்பொன் தேவர் திருமகனார் அவர்கள்!" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு:

நாட்டு விடுதலைக்காகப் போராடிய பசும்பொன் திருமகனார் அவர்களின் பிறந்த நாள் இன்று.

குற்றப்பரம்பரைச் சட்டம் வாய்ப்பூட்டுச் சட்டம் போன்ற அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடியவர். தன் வாழ்நாளில் பெரும்பகுதியை சிறையிலே கழித்த தியாகத்துக்குச் சொந்தக்காரர்.

அரசியல் இயக்கத்தின் தலைவராகவும் மக்கள் பிரதிநிதியாகவும் அவர் ஆற்றிய பணிகள் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு அப்பதிவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திட்டமிட்டு Fake ID உருவாக்கி தவறானப் பதிவு செய்து அதனடிப்படையில் அதிகாலை 5 மணிக்கு

பொருளாதார நிபுணர் கலையரசனை கைது செய்து அச்சுறுத்துவதுதான் தூய ஆட்சியின் லட்சணமா சி.எம்.சார்!

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, அக்.31-

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவில் அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்களின் விலை மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் இரண்டு மடங்கு அதிக விலையில் விற்கப்படுவதாகச் சொன்ன பொருளாதார நிபுணர் "பேராசிரியர் கலையரசன்" பெயரில் திட்டமிட்டு fake id உருவாக்கி தவறான பதிவு செய்து அதனடிப்படையில் அதிகாலை ஐந்து மணிக்கு கைது செய்து அச்சுறுத்துவது தான் தூயஆட்சியின் லட்சணமா CM Sir?



பேராசிரியர் கலையரசன் கைதை கண்டித்து அரசியல் தலைவர்கள், பொதுநிலையினர், பத்திரிக்கை, தொலைக்காட்சி, சோசியல் மீடியாக்களின் கடுமையான கண்டனத்திற்கு அடிபணிந்து பேராசிரியர் கலையரசனை அழைத்து "sorry" கேட்கும் முதல்வரே!, திட்டமிட்டு fake id உருவாக்கி காவல்துறையைக் கைக்கூலியாக ஏவிவிட்ட கொடூரக் குற்றவாளி மீதும்,

கைது செய்த காவலர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்து சட்டத்தின் முன் நிறுத்தி, நீதி வழங்க தயங்குவது ஏன் CM Sir.?

உங்கள் ஆட்சியின் அவலத்தை சுட்டிக்காட்டு கின்றவர்களை அடக்கி ஒடுக்கி அச்சுறுத்துவதில் காட்டும் வேகத்தை உங்கள் கட்சி நிர்வாகிகள் கஞ்சா, மெத்தம் பெட்டமைன், போதை வஸ்துகளை தயாரித்து தங்கு தடையின்றி தமிழக மாணவ சமுதாயத்திற்கு விற்பனை செய்து கொள்ளையடிப்பதை தடுத்து நிறுத்தத் துப்பில்லாமல் செயல்படும் காவல்துறைக்கு பொறுப்பு வகிக்க உங்களுக்கு வெட்கமாக இல்லையா CM Sir.?

இவ்வாறு அவர் தனது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

வாலாஜாபாத் பேரூராட்சி மன்றத் தலைவர்

டபிள்யூ.ஈ.எஸ். இல்லாமல்லி ஸ்ரீதர் இல்ல விழா!

மாவட்டக் கழக செயலாளர் க.சுந்தர் – முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

காஞ்சிபுரம், அக்.31-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், வாலாஜாபாத் பேரூராட்சி மன்றத் தலைவர் டபிள்யூ.ஈ.எஸ்.இல்லாமல்லி ஸ்ரீதர் பேரக் குழந்தைகளும் வாலாஜாபாத் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் டபிள்யூ.ஈ.எஸ்.சுகுமாரன்-11 வது வார்டு துணைச் செயலாளர் எஸ்.வகிதா சுகுமாரன் ஆகியோரின் குழந்தைகள் எஸ்.கவ்ஷிக், எஸ்.ஸ்ரீசஜீத்சாய், எஸ்.ஹரிஷ்சிவன் ஆகியோரின் காதணி விழா நாளை (1.11.2026-ஞாயிற்றுக்கிழமை) காலை11 மணிக்கு காஞ்சிபுரம்- வாலாஜாபாத் சாலை, வாலாஜாபாத் அறம்வளர்த்த நாயகி கன் வென்ஷன் சென்டரில் நடைபெறுகின்றது.

விழாவிற்கு வாலாஜாபாத் பேரூர் கழகச் செயலாளர் என்.பாண்டியன் தலைமை வகிக்கிறார்.

வாலாஜாபாத் பேரூராட்சி மன்றத் தலைவர் டபிள்யூ.ஈ.எஸ்.இல்லாமல்லி ஸ்ரீதர் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

கே.தியாகராஜன், கே.பழனி, டி.பரமானந்தன், எஸ்.செண்பகவள்ளி சதீஷ் பாபு, ஆச்சி எஸ்.பாபு, பி.பார்த்திபன், எஸ்.அழகுசுந்தரம், க.செம்பியன், ஜி.சுந்தரமூர்த்தி, ஆர்.குப்புசாமி, கே.விக்டர் செல்வகுமார், எம்.அமலி சுதா முனுசாமி, கே.ஜெயசீலன், எம்.சண்முகம், ஆர்.நரசிம்மன் ஜி.செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் கலந்து கொண்டு குழந்தைகளை வாழ்த்துகிறார்.

மேலும் சிறுவேடல் க.செல்வம் எம்.பி, வாலாஜாபாத் தெற்கு ஒன்றியச் செயலாளர் பி.சேகர், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக், ப.யுவராஜ், ஆர்.கே.தேவேந்திரன், கெ. ஞானசேகரன், டி.குமார், க.கும ணன், படுநெல்லி பி.எம்.பாபு, என்.எஸ்.பாரிவள்ளல், பி.சசிகுமார், எஸ்.எழிலரசி சுந்தரமூர்த்தி, டி. சஞ்சய்காந்தி, பி.சுந்தரராமன், ஏ.வி.சுரேஜ்குமார், என்.ரவி, ஏ.மொய்தீன்ஷெரீப், ஏ.கணேசன், பி.பூங்கொடி, ஜெ.கே.மணிகண்டன், ஏ.மோகன், இ.அரிகிருஷ்ணன், எம்.சக்திவேல், எல்.சசிகுமார், கே.எல்லம்மாள் தயாளன், த.கு.கருணாநிதி, ஆர்.முரளி, பி.கணேஷ் பாண்டியன், கே. பாரூக், ஏ.சசி என்கிற லோகசந்தர், வி.மாலா, எஸ்.சேட்டு, ஜெ.ஜெயக்குமார், வி.பி.எஸ்.சுசிந்திரன், ஏ.ரவி.எம்.பாஸ்கரன், எஸ்.கிஷன்ஷர்மா, ஜி.சின்னாஜ் என்கிற சீனிவாசன்,

எஸ்.கன்னிகா பழனி, எ.கருணாகரன், ஏ.கே.ஜி.தன சேகரன், ஏ.முகமது இஸ்மாயில், ஆர்.வெங்கடேசன், எஸ்.கலைவாணி சீனிவாசன் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், கழகமுன்னணியினர், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பேரூர் அணிகளின் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு குழந்தைகளை வாழ்த்துகின்றனர்.

எம்.சரவணன், பி.நாகராஜ், எம்.பவித்ரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பொழிச்சலூர் ஊராட்சி பகுதியில் பல்லாவரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இ. கருணாநிதி பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் குரு பூஜையை முன்னிட்டு அன்னாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பொழிச்சலூர் ஊராட்சி முன்னாள் தலைவர் வனஜா தயாளன், முன்னாள் துணைத் தலைவர் ஜோசப், ராஜா, மாடசாமி, ஆகியோரம் உடனிருந்து மரியாதை செலுத்தினார்கள்.

நவ.1 முதல் தமிழகத்தில் மீண்டும் மழை!

சென்னை, அக்.31-

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2-3 செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று காலை 08.30 மணி அளவில் அதே பகுதிகளில் நிலவுகிறது. இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய அந்தமான் நிகோபார் தீவுகள் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக 31-ந் தேதி வலுப்பெறக்கூடும். அதன் பிறகு, அடுத்த 2 நாட்களில் இது மேற்கு-வடமேற்கு திசையில் ஆந்திரப் பிரதேச கடற்கரையை நோக்கி நகரக்கூடும்.

நேற்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தெற்கு கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். நேற்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும்.



பஹ்ரைன் சென்றுள்ள, மாநிலங்களவை கழக உறுப்பினர் கவிஞர் திருமதி ராஜாத்தி சல்மா, பஹ்ரைனில் அந்நாட்டிற்கான இந்தியத் தூதர் டாக்டர் பிரதீப்ராஜ் புரோகித் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து உரையாடினார். பாரதி தமிழ் சங்கத்தின் தலைவர் வல்லம் பஹீர், அப்துல் கய்யூம் ஆகியோர் அப்போது உடனிருந்தனர்.